இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 09-12-2024


# அம்பேத்கர் வழியில் அரசு!

**“தோழர்களே! உங்களுக்கு உற்ற தலைவர் அம்பேத்கர் அவர்கள் என்றும் அவரால் தான் பஞ்சமர்கள், கட்சியர்கள் ஆகியோரின் இழிபிறப்பு என்கிற கொடுமைகளும் நீங்குமென்று நம்பினேன். அதனாலேயே உங்களுக்குத் தலைவராக ஏற்றுக் கொள்ளும்படி பிரச்சாரம் செய்தேன். நானும் தலைவர் என ஏற்றுக் கொண்டேன். என்னைப் போலவே அவரும் 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பு உங்கள் நோய்க்கு மருந்து சொன்னார். அதனாலேயே நாங்கள் சிறந்த நண்பர்களானோம். அவரைப் பற்றி உங்களுக்கு அதிகம் பிரச்சாரம் செய்தேன். அவருடைய கருத்தை நீங்கள் தழுவினாலொழிய உங்கள் குறையும் இழிவும் நீங்காது என்று சொல்கின்றேன்”** என்று 1947 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மயிலாடுதுறையில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் மாநாட்டில் உரையாற்றும் போது தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பரப்புரை செய்த இயக்கம் மட்டுமல்ல திராவிட இயக்கம். அண்ணல் அம்பேத்கரின் சிந்தனைகளைச் செயல்படுத்தும் இயக்கமாகவும் திராவிட முன்னேற்றக் கழக அரசுகள் செயல்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக இன்றைய ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது அரசு, அண்ணலின் சிந்தனைகளை முழுமையாகச் செயல்படுத்தும் அரசாக அமைந்துள்ளது.

கடந்த டிசம்பர் 6 ஆம் தேதி அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளின் போது நடைபெற்ற விழாவானது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உன்னதமான எதிர்காலத்தை அடையாளம் காட்டுவதாக அமைந்திருந்தது.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டமானது 2023 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ரூ.100 கோடி மதிப்பீட்டில் ஆதிதிராவிடர்களுக்காக தொடங்கப்பட்ட தொழில் திட்டம் இது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களை தொழில் முனைவோராக ஆக்கிக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இத்திட்டத்திற்கான தொழில்முதலீட்டில் 35 சதவீதத் தொகையை மானியமாகவும் 65 சதவீதத் தொகையை வங்கிக் கடனாகவும் தரப்படுகிறது. இத்திட்டத்தின் படி 2,136 ஆதிதிராவிடர்க்கு வங்கி கடன்கள் தரப்பட்டுள்ளன. அவர்களில் தகுதியானவர்களான 1,303 தொழில் முனைவோர்க்கு அரசு மானியமாக மட்டும் 159.76 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இதில் 288 மகளிர் தொழில்முனைவோர் 33.09 கோடி ரூபாயை மானியமாகப் பெற்றனர். இதுதான் அண்ணல் அம்பேத்கர் காணவிரும்பிய சமநிலைச் சமுதாயம் ஆகும்.

மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் அவலநிலைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் செயலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள். மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் அவல நிலையினை மாற்றி இப்பணிகளை இயந்திர மயம் ஆக்கி வருகிறார்கள். சென்னை குடிநீர் வடிகால் வாரியமும், தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்க அமைப்பும் இணைந்து ஒரு திட்டதை உருவாக்கினார்கள். இத்திட்டமானது 2023 ஆம் ஆண்டு கையெழுத்தானது. தூய்மைப் பணியாளர்களுக்கு கழிவுநீர் அகற்றும் வாகனங்களும் இயந்திரங்களும் வழங்கி அவர்களையும் உரிமையாளர்களாக ஆக்கி உள்ளது தி.மு.க. அரசு. 50 விழுக்காடு மானியமாகத் தரப்படுகிறது. மாதம் ரூ.50 ஆயிரம் அவர்களுக்கு கிடைக்கும். இந்தக் குடும்பத்தினருக்கு நிரந்தர வருமானம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**எல்லோர்க்கும் எல்லாம் என்பதைத் திராவிடக் கருத்தியலாகச் சொல்லி வரும் முதலமைச்சர் அவர்கள், ‘அனைத்து சமூக வளர்ச்சி’ என்பதையும் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். அதனடிப்படையில் இத்திட்டமானது தீட்டப்பட்டுள்ளது. சமூகநீதியை வாயளவில் பேசாமல், செயலளவில் செயல்படுத்தி வருகிறது தி.மு.க. அரசு.**

ஆனால் இன்றைக்கு அம்பேத்கர் பெயரால் சதிநாடகங்களை நடத்திக் கொண்டு வருகிறார்கள். மனுவின் பெயரால் மக்களை இழிமக்களாக்கி, எதிர்காலத்திலும் அப்படி ஆக்க நினைக்கும் ஒரு கூட்டம் அம்பேத்கரைக் கொண்டாடுவது அருவருப்பானது ஆகும். அம்பேத்கரைப் போற்றுகிறோம் என்ற முகமுடிக்குப் பின்னால் திராவிட மாடல் ஆட்சியைத் தூற்றுவதுதான் அவர்களது உண்மையான நோக்கமாக இருக்கிறது. பட்டியலின மக்களுக்கான கொடுமைகள் அதிகம் நடப்பதாக இம்மாநிலத்துக்கு ஆளுநராக வந்திருப்பவர் எந்த வித ஆதாரமும் இல்லாமல் பேசுவது கண்டிக்கத்தக்கது. சில தற்குறிகள் ஒரு பக்கம் உளறிக் கொண்டிருப்பது பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால் ஆளுநர் என்ற பொறுப்பான பதவியில் இருந்து கொண்டு, வாய்க்கு வந்ததை ‘மைக்’கும் மேடையும் கிடைத்து விட்டது என்பதற்காக உளறக் கூடாது.

**தி.மு.க.வுக்கு சமூகநீதியைப் பற்றியோ, அம்பேத்கரைப் பற்றியோ வகுப்பெடுக்கும் அருகதை எவருக்கும் இல்லை. சுயமரியாதை இயக்க காலம் தொட்டு அண்ணல் அம்பேத்கரைப் போற்றிய இயக்கம் திராவிட இயக்கம். அம்பேத்கர் என்ற பெயரை, எப்படி மொழி பெயர்த்து எழுதுவது என்று தெரியாத காலத்தில் ‘ஆம்போத்கார்’ என்று எழுதி அவரை தமிழ்நாட்டுக்கு அறிமுகம் செய்த இயக்கம் திராவிட இயக்கம். அம்பேத்கரால் பேசுவதற்கு மறுக்கப்பட்ட உரையை 80 ஆண்டுகளுக்கு முன்னால் ‘சாதியை ஒழிக்க வழி’ என்று தமிழ்ப்படுத்தி வெளியிட்ட இயக்கம்.**

52 ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையில் தொடங்கப்பட்ட கல்லூரிக்கு அம்பேத்கர் கல்லூரி என்று பெயர் சூட்டியவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள். அம்பேத்கர் பிறந்த மண்ணில் மராத்வாடா பல்கலைக் கழகத்துக்கு அவரது பெயரை வைக்க எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடந்தது. 1989 ஆம் ஆண்டு சென்னை சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் பெயரையும், சட்டப் பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயரையும் வைத்தவர் தலைவர் கலைஞர்.

**இவை அனைத்துக்கும் மேலாக அண்ணல் பிறந்த நாளை ‘சமத்துவ நாளாக’ அறிவித்த ஒரே முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் மட்டும்தான். அன்றைய தினம் அனைத்து மக்களையும் சமத்துவ உறுதிமொழி எடுக்க வைத்தவர் திராவிட நாயகன் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இதை எல்லாம் ஜீரணிக்க முடியாத சக்திகள், ‘என்னது சிவாஜி செத்துட்டாரா?’ என்று கேட்பதைப் போல புதிதாக இப்போதுதான் அம்பேத்கரை எழுத்துக்கூட்டி வாசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கு அவர்கள் வகுப்பெடுப்பதுதான் சந்தி சிரிக்க வைக்கிறது.**

**தமிழ்நாட்டில் இருந்து தன்னைப் பார்க்க வந்த தோழர்களிடம், ‘உங்களுக்குதான் ஈ.வெ.ராமசாமிப் பெரியார் இருக்கிறாரே!’ என்று பெருமிதத்துடன் சொன்னவர் அண்ணல் அம்பேத்கர். அத்தகைய வழித்தடத்தில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எவரும் கொச்சைப்படுத்தி களங்கப்படுத்த முடியாது.**

## இராமநாதபுரத்தில்

# பா.ஜ.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

இராமநாதபுரம், டிச.9-

திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு க ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியை விரும்பிய இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி, முதுகுளத்தூர், இராமநாதபுரம் ,ஆகிய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஆதனகுறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி அவரது மகன் கார்த்திக் மற்றும் ஆணைசேரி ஊராட்சி மன்ற தலைவர் முருகவேல் மற்றும் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த ஹரிராஜ் தலைமையிலும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த கிளைச் செயலாளர் வடிவேல் தலைமையிலும் மாயா குளம் அதிமுக மகளிர் அணி உமா மகேஸ்வரி தலைமை யிலும் பரமக்குடி வடக்கு நகரம் பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த மாவட்ட தொழில் பிரிவு செயலாளர் ராகவேந்திரன் மற்றும் அவருடன் பரமக்குடி நகரக் கழகத்தை சேர்ந்த நிர்வாகிகளும், ஆதனகுறிச்சி, கிழவனேரி, கண்ணன் கோட்டை, பள்ளிவாசல் கோட்டை, நீர் கோலியேந்தல், பெருங்கருணை, மாயா குளம், உட்பட்ட கிராமங்களில் இருந்து சுமார் 2500க்கும் மேற்பட்ட மகளிர் மற்றும் இளைஞர்கள் இராமநாத புரம் மாவட்ட கழக செய லாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

## இன்று

# திருமதி சோனியா காந்தி பிறந்த நாள்!



**அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களின் பிறந்த நாள் (9.12.2024) இன்று!**

## பெருநகர சென்னை மாநகராட்சியின், சமுதாய மற்றும் பொதுக் கழிப்பறைகளை

# பொது - தனியார் கூட்டாண்மை பங்களிப்பு மூலம் மேம்படுத்தும் பணிகள்!

## முதலமைச்சர் – அரசின் நிர்வாக அனுமதி வழங்கி ஆணை!

சென்னை, டிச.9-

பெருநகர சென்னை மாநகராட்சியின், சமுதாய மற்றும் பொது கழிப்பறைகளை - பொது - தனியார் கூட்டாண்மை பங்களிப்பு மூலம் மேம்படுத்தும் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அரசின் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

சுகாதாரம் என்பது மனிதனின் அடிப்படைத் தேவையாகும். தரமான சுகாதார சேவையை வழங்குவது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பணியாகும். சென்னை போன்ற பெரிய நகரங்களில், பெருவாரியான மக்கள் தங்களது தேவைகளுக்காக, சமுதாய மற்றும் பொது கழிப்பறைகளை சார்ந்துள்ள நிலையில், தரமான உட்கட்டமைப்புகளை உடைய கழிப்பறைகளை உருவாக்கி பராமரிக்க வேண்டியது பெருநகர சென்னை மாநகராட்சியின் இன்றியமையாத கடமையாகும்.

சென்னை மாநகரின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி தனியார் துறையுடன் (சலுகைதாரர்) இணைந்து தரமான உட்கட்டமைப்புகளைக் கொண்ட சமுதாய மற்றும் பொது கழிப்பறை வசதிகளை உருவாக்கி மற்றும் பராமரித்து வருகிறது. இத்திட்டமானது, வடிவமைத்தல் - கட்டுதல் - நிதி மேலாண்மை - செயலாக்குதல் மற்றும் திருப்பி ஒப்படைத்தல் (DBFOT) முறையில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது, பொது கழிப்பறைகளை புதியதாக கட்டுதல் மற்றும் புதுப்பித்தல் வேலைகள் ஒரு வருடத்தில் செயலாக்கவும் பின்னர் அவற்றை எட்டு வருடங்கள் பராமரிப்பு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டு, Hybrid Anuity Model முறையில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டமுறையின் கீழ், கழிப்பறைகளின் வடிவமைப்பு, புதியதாக கட்டுதல் மற்றும் சீரமைத்தல், கழிப்பறைகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு, மையப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு அமைப்பை (CCMS) உருவாக்கி இயக்குதல் போன்றவை சலுகைதாரரின் செயல்பாட்டின் முக்கிய அம்சங்களாகும்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் 5, 6 மற்றும் 9வது (மெரினா மட்டும்) மண்டலங்களை உள்ளடக்கிய

372 இடங்களில் அமைந்துள்ள சமுதாய மற்றும் பொதுக் கழிப்பறைகளில் உள்ள 3,270 இருக்கைகளை ரூ.430.11 கோடி திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிக்காக சலுகைதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது 70 விழுக்காடு பணிகள் முடிவடைந்து, பராமரிப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் வெற்றிகரமான செயல்பாடு, பல்வேறு தரப்பு மக்களின் பெரும் பாராட்டையும், வரவேற்பையும் பெற்று வருகிறது. குறிப்பாக, சமுதாய மற்றும் பொது கழிப்பறைகளை பயன்படுத்தி வரும் சென்னை மாநகர மக்களுக்கு இத்திட்டம் பெரும் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளது. கழிப்பறைகளின் பராமரிப்பு பணிகள் தினசரி அடிப்படையில் ‘இன்டிபென்டன்ட் இஞ்சினியர்’ என்ற கலந்தாலோசகர் மூலம் கண்காணிக்கப்பட்டு, பணிகளின் தரம் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது. செம்மையான பராமரிப்பின் விளைவாக சென்னை மாநகர மக்களின் சமுதாய மற்றும் பொது கழிப்பறைகளின் பயன்பாட்டில் ஒரு பெரும் மாற்றம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

சென்னை மாநகரில், முதற்சிப்பத்தின் (package1) கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் செம்மையான செயலாக்கத்தின் மூலம் பெறப்பட்டுள்ள வெற்றியைத் தொடர்ந்து, சென்னை மாநகரம் முழுவதும் இத்திட்டத்தை அதே அளவில் செம்மையாக செயல்படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, 7,166 இருக்கைகளுடன் கூடிய 1002 கழிப்பறைகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, சிப்பம்2ன்கீழ் 1, 2, 3 மற்றும் 4வது மண்டலங்களில் உள்ள 285 இடங்களில் 2,301 சமுதாய மற்றும் பொதுக்கழிப்பறை இருக்கைகள் ரூ.362.60 கோடி மதிப்பீட்டிலும், சிப்பம்3ன்கீழ் 7, 8, 9 மற்றும் 10வது மண்டலங்களில் 395 இடங்களில் உள்ள 2,760 சமுதாய மற்றும் பொதுக்கழிப்பறை இருக்கைகள் ரூ.455.43 கோடி மதிப்பீட்டிலும், சிப்பம்4ன் கீழ் 11, 12, 13, 14 மற்றும் 15வது மண்டலங்களில் 322 இடங்களில் உள்ள 2,105 சமுதாய மற்றும் பொதுக்கழிப்பறை இருக்கைகள் ரூ.383.97 கோடி மதிப்பீட்டிலும் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கழிப்பறைகளை பராமரிக்கும் பணிக்கான செலவினங்கள், சலுகைதாரருக்கு (concessionaire) முக்கிய செயல்பாட்டு அளவீடுகளின்

(Key Performance Indicators) அடிப்படையில் வழங்கப்படும். இது இன்டிபென்டன்ட் இஞ்சினியர் (IE) என்ற கலந்தாலோசகர் மூலம் கண்காணிக்கப்படும். முதலமைச்சர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மொத்தம் ரூ.1,202 கோடி மதிப்பீட்டில் இப்பணிகளை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்.

நேர்த்தியான பராமரிப்புடன் கூடிய சுத்தமான, சுகாதாரமான பொது கழிப்பறைகள், நகர்ப்புற உட்கட்டமைப்பின் ஒரு முக்கிய அம்சமாகும். இது பொது சுகாதார வசதி மற்றும் ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு முக்கிய பங்களிப்பாக உள்ளது. இந்திய அளவில், அதிக மக்கள் தொகை கொண்டதும் முக்கிய நகரங்களில் ஒன்றாகவும், தகவல் தொழில்நுட்பம், ஆட்டோமொபைல் மற்றும் சுற்றுலாத் துறைகள் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் உலகளவில் சிறந்து விளங்குகின்ற வளர்ச்சியடைந்து முன்னணி மாநகரமாகவும் சென்னை திகழ்ந்து வரும் நிலையில் சென்னையின் பொது சுகாதாரத்தினை மேம்படுத்துவது அவசியமாகிறது.

சென்னை மாநகர மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் அமைகின்ற இப்பணிகளை அரசு தொடர்ந்து முனைப்புடன் செயல்படுத்தும்.

## இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# ரூ.8.42 கோடியில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

இராணிப்பேட்டை, டிச.9

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 7.12.2024 அன்று இராணிப்பேட்டை மாவட்டத்தில் மொத்தம் 8.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம், பள்ளி கட்டடங்கள், புனரமைக்கப்பட்ட குளம் உள்ளிட்ட வளர்ச்சி திட்டப் பணிகளை திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம் நகராட்சியில் பொதுமக்களுக்கு மருத்துவ சேவையை எளிதில் வழங்குவதற்காக ரூபாய் 2.23 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 30 படுக்கைகள் மற்றும் நுழைவு கூடம், காத்திருப்பு கூடம், மருந்தகம், ஊடு கதிர் பிரிவு, ஸ்கேன், பிரசவ அறை, அறுவை சிகிச்சை அறை, பச்சிளம் குழந்தைகளுக்கான அறை, இரத்த வங்கி உள்ளிட்ட வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

மேலும் வாலாஜா அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 35.66 இலட்சம் ரூபாய் மற்றும் ROUND TABLE INDIA மூலம் 17.84 இலட்சம் ரூபாய் என மொத்தமாக 53.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடம், நகராட்சி இருபாலர் நடுநிலைப் பள்ளியில், பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறை கட்டடம், வாலாஜாபேட்டை நகராட்சி மார்கெட் நடுநிலைப் பள்ளியில் பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறை கட்டடம் ஆகிய பள்ளிக் கட்டங்களையும் திறந்து வைத்தார்.

வாலாஜாபேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வாலாஜாபேட்டை பேருந்து நிலையம் 2.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், பேருந்து நிலைய மேற்கூரை இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் 1.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

மேம்படுத்தப்பட்ட வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தை துணை முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்து பார்வையிட்டார். பின்னர் வாலாஜாபேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ள பூண்டி சாமியார் குளத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

இன்றைய தினம் துணை முதலமைச்சர் அவர்கள் மொத்தம் 8.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற வளர்ச்சி திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.எம்.முனிரத்தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட வருவாய் அலுவலர் ந.சுரேஷ், நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் திருமதி லட்சுமி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.செந்தில்குமார், நகரமன்ற தலைவர் திருமதி ஹரிணி தில்லை, துணைத் தலைவர்கள் கமலராகவன், குல்ஜார் அஹமது மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2024) இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 131 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ள பூண்டி சாமியார் குளத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல். ஈஸ்வரப்பன், ஏ.எம். முனிரத்தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, மாவட்ட வருவாய் அலுவலர் ந. சுரேஷ், நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் திருமதி. லட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2024) இராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம் நகராட்சியில் ரூபாய் 2.23 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.எம்.முனிரத்தினம், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.